# நகை




பா.சிவபாலன்

# நகை

பா. சிவபாலன்

முதற் பதிப்பு : 2000 ஒக்டோபர்
பதிப்புரிமை ஆசிரியருக்கே
பதிப்பு : கங்கை ஓ(f)செற் பிறின்டேஸ்
விலை : ரூபா. 50/=

# அறிமுகம்

ஈழத்து 'மஹாகவி' தமிழுக்குத் தந்த பெறுமதி வாய்ந்த கொடை குறும்பா. அது குறும் + பா (சிறுபாட்டு) என்றும், குறும்பு + ஆ? (வெறும் குறும்பல்ல. பொருள் பொதிந்தது) என்றும் விரியும்.

மஹாகவிக்கு மாதிரி (Model) ஆக வாய்த்தது Limerick என்ற நகைச்சுவைப் பாவகை. நம்ப முடியாத, சிரிப்பூட்டக் கூடிய கற்பனையே இதற்கு அடிப்படை.

ஆங்கிலக் கவி மரபில் அடிகளின் இறுதியில் எதுகை (rhyme) அமையும். Limerick இல் முதலாம், இரண்டாம், ஐந்தாம் அடிகள் எதுகை பெறுகின்றன. மூன்றாம், நாலாம் அடிகள் வேறோர் எதுகை பெறுகின்றன. உதாரணத்திற்கு ஒன்று.

There was an old man of Peru
Who dreamt he was eating his shoe
He awoke in the night
In a terrible fright
And found it was perfectly true

Peru – true – shoe ஓர் எதுகை, night – fright ஓர் எதுகை

இது தவிர ஒத்திசையிலும் ஓர் ஒழுங்குண்டு. கவிதையை அலகிட்டால்,

| | | |
|---|---|---|
| -/ | --/ | --/ |
| -/ | --/ | --/ |
| | | |
| --/ | --/ | |
| --/ | --/ | |
| | | |
| -/ | --/ | --/ |

_ / என வரும் சீர் **iamb** எனப்படும்

_ _ / என வரும் சீர் **anapaest** எனப்படும்.

அழுத்தம் பெறும்/பெறா அசைகள் என்ற பாகுபாடு தமிழில் இல்லை. ஆயின், குறும்பாவின் யாப்பு என்ன? அலகிட்டுப் பார்க்கலாம்.

"உத்தேசம் வயதுபதி னேழாம்
உடலிழைக்க ஆடல்பயின் றாளாம்
எத்தேசத் தெவ்வரங்கும்
ஏறாளாம் ஆசிரியர்
ஒத்தாசை யாற் பயிற்சி பாழாம்"

– மஹாகவி –

தேமாங்காய் கருவிளங்காய் தேமா
கருவிளங்காய் கூவிளங்காய் தேமா
தேமாங்காய் கூவிளங்காய்
தேமாங்காய் கூவிளங்காய்
தேமாங்காய் கூவிளங்காய் தேமா.

ஆக, தமிழில் குறும்பாவுக்கு பின்வருமாறு இலக்கணம் வகுக்கலாம்

முதலாம், இரண்டாம், ஐந்தாம் அடிகள் சிந்தடிகளாய் (அதாவது முச்சீர் உடையனவாய்) இயைபுத் தொடை பெற்றும், மூன்றாம், நான்காம் அடிகள் குறளடிகளாய் (அதாவது இருசீர் உடையனவாய்) முதலாம், மூன்றாம் ஐந்தாம் அடிகள் எதுகை பெற்றும் வரும் அங்கதப்பா.

மஹாகவி காட்டிய வழியில் குறும்பா யாத்திருக்கின்றார் சிவபாலன். மஹாகவி காட்டிய வழிதான் என்ன? சமூகத்தில் தான் கண்ட மனிதர்களின் குறைகளை, பலவீனங்களை, அக முரண்பாடுகளை நகைச் சுவையாகச் சுட்டிச் செல்வது. இது தான் அங்கதம் - Satire. அங்கதத்துக்கும் வசைக்கும் ஒரு நுணுக்கமான வேறுபாடு உண்டு.

"கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்"

என்பது வசை

"தன்னுடையை மாற்றுகிறாள்
பொன்னம்மாள் கிணற்றடியில்
இன்னுமிறங் கானாம்அவ் வெத்தன்"

என்பது நளினமான நகைச்சுவை.

மஹாகவி வாழ்ந்த சமூகம் மேலும் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. இம் மாற்றங்களில் முக்கியமானது புலப் பெயர்ச்சி. பிள்ளைகள் எல்லாம் புலம் பெயர்ந்து போய் விட, தனிமையில் வாடும் பெற்றோரின் அவலம் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "எந்தையும் தாயும்" நாடகத்தின் தொனிப் பொருள். சிவபாலன் காட்டும் கந்தவனம் கைதடி முதியோர் இல்லத்தில் கடைசிக் காலத்தை கழித்துக் கண்மூடி விடுகின்றார். கனடாவில் ஐந்து பிள்ளைகளும், ஆறாமவன் அபுதாபியில் இருந்தும் கிழவர் அனாதையாய்ச் செத்து விடுகின்றார். இறுதிக் கடன்களை முதியோர் இல்லமே செய்கின்றது. இந்த அவலம் கவிதைக்குப் பொருளாகின்றது.

"கந்தவனம் காலமாகி விட்டார்
கைதடியார் கடமைகளைச் செய்தார்
ஐந்து பிள்ளை கனடாவில்
ஆறாமவன் அபுதாபி
இந்த வகை பெருமையவர் கொண்டார்"

அந்த இளைஞன் ஓர் மைனர் பேர்வழி. தகப்பனுக்கோ ஒரே மகன். எங்கே ஓர் ஏழைப் பெண்ணை இழுதது்க் கொண்டு வந்து சீதனம் வாங்கும் தனது கனவைச் சிதறடித்து விடுவானோ என்ற கவலை அவருக்கு. மகனை வெளிநாடு அனுப்புவதே அவர் கண்ட தீர்வு. வெளிநாட்டு மாப்பிள்ளை என்று அதிக சீதனம் வாங்கும் கற்பனையை வளர்த்துக் கொள்கின்றார் கணபதியார். சில ஆண்டுகள் உருள மகன் வருகின்றான், வெள்ளைக்காரப் பெண்ணோடும் பிள்ளையோடும்.

"காதலிலே மைந்தன் ஈடுபாடு
கணபதியார் மனமோ பெரும்பாடு
ஆதலினால் அனுப்பி வைத்தார்
ஆனை அவன் வந்தான் வெள்ளைக்
காதலியும் பிள்ளையு மாய் நாடு".

யாழ்ப்பாண மக்கள் தெற்கே போவதற்குப் படும்பாடு பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி. பதிவு நடைமுறைகள், காத்திருப்பு, பயணத்தில் ஏற்படக் கூடிய ஆபத்து என இதில் பல அம்சங்கள் உள்ளன. இடைக்கிடை தொலைபேசித் தொடர்பும் அறுந்து விட்டாலோ கேட்கவே வேண்டாம்.

இப்படித்தான் மகன் திருமணத்திற்காக கொழும்பு அல்லது வெளிநாடு போக மணியத்தார் பதிவு செய்து வைத்தார். விமான சேவை நிறுத்தப்பட்டது. கப்பல் சேவைக்கும் நித்திய கண்டம். ஒருவாறு clearance கிடைத்து போய்ச் சேர்ந்தார் பேரன் பிறந்த ஐந்தாம் நாள்! போரினால் நம் வாழ்க்கை தலைகீழாகி விட்டதை இதைவிட மனதில் தைக்கக்கூடியதாகக் கூற முடியுமா?

"மைந்தனுக்குத் திருமணமாமென்று
மணியத்தார் பதிவு செய்தாரன்று
வந்தறிந்தார் பாஸ் கிடைத்து
கப்பலுக்காய்க் காத்திருந்து
இந்து நாளே பேரன் பிறந்தென்று"

ஈழத்துத் தமிழன் உலகமெலாம் கூலி வாழ்க்கை வாழ்கின்றான்.

"நாடுகள்தோறும் நீ கூலியாய் அலைந்தாய்
நாலு பேருக்கும் நீ கேலியாய்க் கிடந்தாய்."

எனக் காசி ஆனந்தன் பாடியதுண்டு.

புலப் பெயர்ச்சியால் தொலைந்து போவது எமது அடையாளங்களில் மிகமுக்கியமான மொழி (தமிழ்). அயல் நாடுகளில் பிறந்து வளரும் புதிய தலைமுறை தமிழ் பேசாத தலைமுறை என்ற யதார்த்தத்தினை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கும் வெளி உலகுக்கும் தொலைபேசித் தொடர்பு வாய்த்த கிளுகிளுப்பில் இங்கிருக்கும் ஆச்சி வெளிநாட்டுப் பேர்த்தியுடன் பேசுகின்றாள்.

"ஆச்சி இங்க பேசுகிறன் பிள்ளை"

"ஹலோ, நைஸ் ரூ ஹியர் யுவர் வொய்ஸ் கிறன் மா"

கிழவிக்கு ஒன்றும் புரியவில்லை. குறும்பாவைப் பாருங்கள்.

"ஆச்சி இங்கே பேசுகிறேன்" என்றாள்
ஆஸ்திரியாப் பேர்த்தி "ஹலோ" என்றாள்
பேச்சு ஒன்றும் புரியவில்லை
பெரியதம்பி இடைமறித்தான்
"போச்சுதடா தமிழ்" கிழவி நொந்தாள்

ஆக, மஹாகவி இட்ட அடித்தளத்தின் மீது மேலும் சில மாடிகளைச் சிவபாலன் கட்டியிருக்கின்றார். இவ்விலக்கியம் எமது இனத்தின் அவல நிலையை எள்ளற் சுவையோடு சொல்கின்றது. மஹாகவி போலவே கவிஞரும் இப் பாக்களை ஏற்ற சித்திரங்களோடு வெளியிட்டிருக்கின்றார். ஓவியர் வரதராஜன் பாராட்டுக்குரியவர்.

"ஏரகம்"
பொற்பதி
கொக்குவில்

கவிஞர் சோ. பத்மநாதன்

# என்னுரை

நகைச்சுவையோடு கலந்து சில கருத்துக்களை நம்மவர்களிடையே தெரிவிப்பதற்கு ஒரு வழியாக இக் கவிதைத் தொகுப்பினை வெளியிட எண்ணினேன். இவ்வெண்ணத்திற்கு என்னை இட்டுச் சென்றது மகாகவியின் குறும்பாக்களே. நகைச்சுவை என்பது மனிதனின் உளநலத்திற்கு உதவ வல்லது என்பது உளவியாலாளர் கணிப்பாகும்.

மகாகவி நளினமாகவும் சிலேடையாகவும் அரியபல கருத்துக்களைக் குறும்பா மூலம் மக்கள் மனதில் பதித்தார். எமது சமுகம் இப்போ கண்டுள்ள மாறுதல்கள் சில வேதனை அளிக்கக்கூடியனவாகக் காணப்படுகின்றன. பணத்தையும் அதனால் ஏற்படும் வசதிகளையும் நோக்கமாகக் கொண்டு நாம் செயற்படுவதால் எல்லோராலும் போற்றிப் புகழப்பட்ட எமது மொழி, கலாச்சாரம், பண்பாடு இவைபற்றிய சிந்தனைகள் அருகிவிடுகின்றன. மேலும் எமது பிரதேச தற்போதைய சூழ்நிலை காரணமாக ஏதோ ஒரு வழியிலாவது எம் வாழ்க்கையை வசதிப்படுத்த முனைவதால் இப்படித்தான் வாழவேண்டும் என்று வரையறுத்து வாழ்ந்துவந்த நாம் இப்போ எப்படியாவது வசதிகளைப் பெற்றுக் கொண்டால் சரி என்ற முனைப்புடன் செயற்படுகின்றோம். இக்கசப்பான உண்மைகளை நாம் கவனத்திற்கு எடுக்க வேண்டுமென்ற உந்துதலால் இக்கவிதைத் தொகுப்பை உருவாக்கி வெளியிட எண்ணினேன். ஏதோ ஒரு வகையில் அனைத்தையும் நாம் உணர்ந்து செயற்படவேண்டும் என்பதே என் அவா.

எனது இம் முயற்சிக்கு ஊக்கமளித்த என் நண்பர்கட்கும் உற்சாகமூட்டி முன்னுரை வழங்கிய திரு. சோ. ப. அவர்களுக்கும் ஓவியர் திரு வரதராஜனுக்கும் இக் கவிதைத் தொகுப்பினை அழகுற அமைத்துத் தந்த கங்கை அச்சகத்திற்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

214/4C, இராமநாதன் வீதி
யாழ்ப்பாணம்.

பா. சிவபாலன்.



# துணை

என்றும் துணை நிற்பான் இறை

இம்மையும் மறுமையும் என்கிறது மறை

நன்றாய் அவனை நம்பி

நாம் தொழுதால் வாழ்வில்

குன்றாது சுகம் ஏது குறை



# அன்னை

பத்து மாதம் வருத்தியவள் தன்னை
பாலூட்டி வளர்த்திட்டாள் உன்னை
சொத்து சுகமென்பதெல்லாம்
உன்சுகமே என்றிருப்பாள்
இத்தரையில் அவள் பெயர்தான் அன்னை



# மனைவி

தான் சேவை செய்திடுவாள் தலைவி

தலைவனுக்கு என்றுமவள் துணைவி

ஊணுறக்கமின்றி என்றும்

உறவுக்காய் உழைத்திடுவாள்

மாநிலத்தின் மதிப்பிலவள் மனைவி.



# பட்டணம்

பட்டிக்காட்டுப் பாவை வேண்டா மென்று
பட்டணத்தாள் பத்மாவுடன் சென்று
எட்டுநாளே இருந்து வந்தான்
ஏசினாளாம் எதிர்த்தவனை
சட்டிபானை தேய்க்கவில்லை யென்று!



# காதல்

உள்ளத்தால் இணைவதுவே காதல்

உடற்பசியின் தாக்கமெனில் மோதல்

கள்ளம் கபடம் மனம்

கருத்தொருமித்தில்லை வாழ்க்கை

பள்ளந்தான் எவரையுமேன் நோதல்.



# மிச்சம்

உண்ணாமல் சேர்த்தாரொரு லட்சம்
உலகநாதர்பாடு பெரும் அச்சம்
கண்ணாகக் காத்துவந்தார்
கடைசி வரை அவர் ஓர் நாள்
மண்ணாகிப் போனதுதான் மிச்சம்.



# விசா

நாடு விட்டு நாடு சென்றால் தம்பி
நல்ல நிலை வருமென்று நம்பி
வீடு வாசல் ஈடு வைக்க
விசாவின்றி வெளிக்கிட்டான்
கோடு ஏறி எண்ணுகிறான் கம்பி.



# ஆறுதல்

அன்பு செய்தல் ஆண்டவன்றன் தொண்டு
ஆறுதல் உனக்கதில்தான் உண்டு
என்பிலா நாவிலென்றும்
இன் சொல் நடமாடுக பின்
துன்பமது அஞ்சுமுனைக் கண்டு.




# கணக்கு

ஐந்தேநாள் காதலியவ ளெனக்கு
அடுத்த பிழை நான் போட்ட கணக்கு
பந்துமுகம் பார்த்து நின்றேன்
பல்தெரிய அங்கொருவர்
வந்து அவள் மனைவியென்றார் தனக்கு.



# அனுபவி

ஆயிரமாய் இலட்சமதாய் சேர்ப்பார்
அனுபவியாமல் அதனைக் காப்பார்
வாய்வயிற்றைக் கட்டி முழு
வாழ்நாளும் சேர்த்ததெல்லாம்
போயழியச் சீதனமாய் அளிப்பார்.



# சுமை

தன்வயிற்றுப் பாட்டுக்காய் தங்கம்

தவறுகிறாள் அவள் வாழ்வில் களங்கம்

பின்னர் ஒரு பத்து மாதம்

பேதை வாழ்ந்து முடித்த போது

இன்னுமொரு சுமையவளின் பக்கம்.



# பாசம்

தன்பாலை ஊட்டத்தாய் மறுப்பு

தகரப்பால் தருவதவள் பொறுப்பு

பின்நாளில் பெற்றவளை

பிள்ளை ஒரு விடுதியிலே

இன்பமுடன் சேர்த்திடவே விருப்பு.




# பெருமை

கந்தவனம் காலமாகி விட்டார்

கைதடியார் கடமைகளைச் செய்தார்

ஐந்து பிள்ளை கனடாவில்

ஆறாமவன் அபுதாபி

இந்தவகை பெருமையவர் கொண்டார்.



# மன்னன்

காதலிலே மைந்தன் ஈடுபாடு

கணபதியர் மனமோ பெரும்பாடு

ஆதலினால் அனுப்பி வைத்தார் ஆளை

அவன் வந்தான் வெள்ளைக்

காதலியும் பிள்ளையுமாய் நாடு.



# மோகம்

மனம் நிறைந்த மாப்பிளையா இல்லை

மேல்நாட்டு மோகமதால் தொல்லை

தனம் அதுவே வாழ்க்கையெனத்

தரகர்வழி போவதனால்

தினம் மகளிர் துயருக்கிலை எல்லை.



# பட்டதாரி

பள்ளிக்கூட பாடமதை விடுத்து
பரீட்சைகளில் பாதிசித்தி எடுத்து
புள்ளிகளைக் கோட்டை விட்டு
போனவழி போய் வந்தான்
கள்வனென்ற பட்டமதை எடுத்து.



# உத்தியோகம்

பட்டம்மாள் உத்தியோகம் எடுத்தாள்
படிக்காத மணப்பேச்சைத் தடுத்தாள்
கட்டினால் உத்தியோகக்
கணவனைத்தான் எனக்கிழடு
தட்டும்வரை கன்னிகாலம் கழித்தாள்.



# சீதனம்

சீதனமும் பெண்ணுமினி இல்லை
சிவலிங்கம் வகுக்கின்றார் எல்லை
சாதகமாய் வந்தனேகர்
சங்க அங்கத்தவரானார்
வேதனைதான் - இளைஞரதில் இல்லை.



# கேலி

அவளுக்குக் கட்டுகிறாய் தாலி
அதற்கவளைக் கேட்பதுமேன் கூலி
இவளுக்காய் நீ இங்கு
என்ன செய்து கிழிக்கின்றாய்
குவலயத்தில் சீதனமோர் கேலி.




# மது

மது முதல் ஏற்றிடும் போதை
மறுகட்டம் கேட்குமொரு மாதை
புதுவித நடை தரும்
புலம்பி அலம்பிட வைக்கும்
அதுதரும் பின்பல வாதை.




# போதனை

ஆண்டவன் புகழை நிதம் ஓதி
அன்புடன் அறிவினைப் போதி
மீண்டுமிப் பூவுலகம்
மேன்மை பெற்றோங்கிடும்
நீண்டு நிலைத்திடுமாம் நீதி.



# பயணம்

மைந்தனுக்குத் திருமணமா மென்று
    மணியத்தார் பதிவு செய்தார் அன்று
வந்தறிந்தார் 'பாஸ்' கிடைத்து
    கப்பலுக்காய் காத்திருந்து
ஐந்து நாளே பேரன்பிறந் தென்று.



# அலுவலகம்

அலுவலகம் வந்ததுமே அரட்டை
அலசிடுவார் ஊர்வம்புத் திரட்டை
வலுவிழந்து போகும் வரை
வாயோய்வதில்லை எங்கள்
குலசிங்கம் பின்விடுவார் குறட்டை.



# கதை


கற்பகத்தைக் கண்டு காதலித்தான்

கன்னியவள் கனியெனவே சுவைத்தான்

சிற்றின்பம் அலுத்ததங்கு

சீதனத்தை நினைத்தவளில்

கற்பில்லை யென்று கதை முடித்தான்.



# எய்ட்ஸ்

பூவுக்குப் பூ தாவியது வண்டு
போதையிலே மூழ்கிமது வுண்டு
வேவு பார்த்திருந்த எய்ட்ஸ்
வேளை வந்து கூறியது
சாவுக்குத் தேதியதைக் கண்டு.



# கொடுமை

எல்லோர்க்கும் உண்டிங்கு முதுமை
இல்லையென்றால் அதுஉலகப் புதுமை
நல்லோராய் நமை ஈன்று
நானிலத்தில் விட்டவரை
அல்லலுற வைப்பது தான் கொடுமை.



# மாற்றம்

என்றிந்த நிலை மாற்றும் உலகம்
ஏனெங்கும் எந்நாளும் கலகம்
சென்றுவிட்ட அன்பகிம்சை
சீர்பக்தி இவை மீண்டால்
அன்றுபோல ஆகிவிடும் உலகம்.



# புலம்பெயர்வு

"ஆச்சி இங்கே பேசுகிறேன்" என்றாள்

'ஆஸ்திரியா' பேர்த்தி "ஹலோ" என்றாள்

பேச்சு ஒன்றும் புரியவில்லை


பெரியதம்பி இடைமறித்தான்

"போச்சுதடா தமிழ்!" ~ கிழவி நொந்தாள்.



# மூப்பு

வந்து விட்டால் பூமிக்கு மூப்பு
　　வளரும் பகலிரவு ஈர்ப்பு
பந்துபோல நாம் சூழலப்
　　பருவம்பல மாறிவரும்
அந்தரத்தில் அடிபடவும் வாய்ப்பு



# திருமணம்

பாடித் திரிந்தனவாம் சிட்டு

பருவம் வந்தது பாதை விட்டு

கூடித்திரிந்த பின்னர்

கொண்டாடி மகிழ்ந்ததால்

தேடிக் கொண்டனவாம் கால் கட்டு.



# கூட்டுக் குடும்பம்

குடும்பமது கூட்டாக வேண்டும்

குழந்தைகட்குப் பாசம்வரத் தூண்டும்

படும் மனதில் பற்றுதலும்

பரிவும் நல்லபண்பாடும்

விடும் உலகைப் பிடித்தசனி மீண்டும்.



# தாக்கம்

எங்கேயோ எண்ணெய்விலை ஏற்றம்
எனதில்லத்தடுப்பெரிப்பில் மாற்றம்
“இங்குங்கள் எண்ணத்திற்
காட என்னால் ஏலாது”
எங்கம்மாள்தன்முகத்தில் சீற்றம்.



# தொலை நகல்

கலைமகளின் கடிதமதைக் கண்டாள்

கண்ணம்மாள் கண்வியந்து பார்த்தாள்

விலையான ஓர் சேலை

விரைவாக இவ்வாறே

தொலைநகலில் அனுப்புபிள்ளை என்றாள்.



# நாமம்

வாய்க்கினித்த பெயர்களெல்லாம் போச்சு
வந்தபடி பெயர்ப் பதிவு ஆச்சு
சேய்களுக்குப் பொருள் பொதிந்த
செந்தமிழ்ப் பெயர் மறைந்தந்நியர்
நாய்க்கு வைக்கும் நாமமதாய் ஆச்சு.



# ஊருக்கு உபதேசம்


முத்து ஒரு முற்போக்கு வாதி

முழங்கிடுவார் வீதிக்கு வீதி

இத்தனைக்கும் ஊரிலுள்ள

ஏழைகள் தம் வழக்குரைப்பில்

முத்துவே முதல்பிரதி வாதி.



# ஏமாற்றம்


தலை நகரில் தமிழர் குடி யேற்றம் - இடம்

தந்தவர்கள் அங்கிருந்து வெளியேற்றம்

விலையதற்கு வாடகையோ

டிணைந்த பெரு வியாபாரம்

நிலை இவர்கள் உழைப்பழிந்து ஏமாற்றம்.



# பெருமை

வாழ்க்கை வளம் தேடுவது இனிமை
வசதிமட்டும் நாடுவது மடமை
கூழ் ஒன்றே வாய்த்தாலும்
மகிழ்வோடு குடித்தனத்தை
யாழ் மண்ணில் நடத்துவது பெருமை



# அவசரம்

கந்தசாமி கடுகதியாய் விரைந்தான்
கனகலிங்கம் வழிமறிக்க முனைந்தான்
வந்து கதைப்பேன் இப்போ
வலு வேலை என்றவனை
சந்தியிலே "சென்றி" ஆமி அழைத்தான்.



# குடி இருப்பு

வாடகைக்குக் குடிஇருந்தார் வரதர்

வலிந்தவரை எழுப்பிவிட்டார் பரமர்

கோடையிடியென இடித்து

கோர யுத்தம் வெடித்த போது

ஓடையோர அகதிகளவ் விருவர்.



# பகற் கொள்ளையர்

சந்தையிலோர் பொருள்தட்டுப்பாடு

சங்கடமாம் மக்கள் தம்பாடு

முந்தையநாள் மூலைக்கு

மூலை கிடந் தொளித்துவிட்ட

விந்தை பகற் கொள்ளையர், ஏற்பாடு.



# திரு

அனைவர்க்கும் இனியவனாய் இரு

ஆகட்டும் அதுவேயுன் கரு

உனைப்பார்த்தே ஊர்உலகம்

உயரும் என்ற சிந்தனையை

நினைவிருத்து அது உனக்குத் திரு.

# நகை படைப்பாளர் பற்றி...



தன் இளமைக்காலத்தில் இருந்தே முத்தமிழும் கைவரப் பெற்ற கலைஞராய் விளங்கிய சிவா கவிதா ஞானம் மிக்கவர். சொல்ல விரும்பும் விடயத்தை சொட்டாக எளிமையான நடையில் இலக்கண வரம்புகளை அனுசரித்து சொல்லும் பாணி அவருடையது. ஈழத்து மகாகவி செய்த குறும்பாத்துக்கு பிறகு அந்த கவிதா மரபுகளையும் விசேடத்தையும் சரியாகப் புரிந்து கொண்டு நகையைத் தந்திருப்பவர் சிவா. கல்வித்திணைக்களத்தில் ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் கலைநிகழ்ச்சிகளில் இவர் கவிதைகள் பெற்ற பாராட்டுக்கள் குறிப்பிடத்தக்கவை. இதே போன்று பல வானொலி நாடகங்களை எழுதி தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்ட இவர் அண்மையில் இலங்கை வானொலியால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட பவளவிழா நாடகப்போட்டியில் இரண்டாம் பரிசினைப் பெற்று அத்துறையிலும் தனது திறமையை வெளிப்படுத்தியமை பாராட்டுக்குரியதாகும்.


ஆசிரியமணி M.S. ஸ்ரீதயாளன்
உதவி இயக்குனர் (தமிழ்)
பண்பாட்டலுவலகதிகாரி.
யாழ். கல்வி வலயம்.

லவ் லேன்,
உடுவில்.
சுன்னாகம்.



கங்கை ஓ(F)ப்செற் பிறிண்டர்ஸ் N.G